

சிகரமாய் நிற்கும்
சிவத்தமிழ்ச் செல்வி வாழி நீடூழி !

— முரசொலி

சிவமயம்

நீறுடை நெற்றி, நெஞ்சினில் ஈரம்.
நிறைகுடம் அனையதோர் பொலிவு
ஆறணி சடையெம், ஈசனோர் பாகம்
அமர்ந்தவட் காந்திருத் தொண்டில்
ஊறிய வாழ்வும் உடையதங் கம்மா
உத்தமி போற்பணி யாற்ற
வேறுயார் உள்ளார்! நெடிதுநாள் வாழ
வேண்டும் நம் சிவத்தமிழ்ச் செல்வி!

சொற்சுவை பொருளின் சுவையொடு மேடை
தோறும்நீ பேசுதல் கேட்டு
நிற்பவர் அகலார் இருப்பவர் எழும்ப
நினைகிலர், ஈதெலாம் அம்மா
முற்பிற வியிலே செய்தவம் இந்நாள்
முழுப்பயன் தருவது கண்டோம்;
அற்புதம் உங்கள் வாழ்வு நந் தமிழர்க்(கு)
ஆக்கமும் ஊக்கமும் தருமாம்!

சுந்தரி துர்க்கை தாய்தொழுந் தெய்வம்
துணைநமக் குழுகொடைப் பதியில்
வந்தவள் கோயில் நாளொரு கோலம்
பொழுதொரு வண்ணமாய் வளர்ந்து
சிந்தையை அள்ளும் படிபணி செய்து
வருகிறாய் சிவத்தமிழ்ச் செல்வீ!
செந்தமிழ்ப் பயனே அன்னையின் கோயில்
திருவிளக் காயினை — வாழி

அகதிகட் குதவி, பசித்தவர்க் கன்னம்,
ஆதர வற்றவர்க் கறங்கள்.
மகளிருக் கில்லம், கலைகளுக்கு கூக்கம்
வறியவர்க் கீகைஎன் றெல்லாம்
புகழினை நாடா தடக்கமாய் நீசெய்
புண்ணிய மாயின கண்டோம்:
சிகரமாய் எழுந்திம் மண்ணிலே நின்றாய்
சிவத்தமிழ்ச் செல்வியே வாழி!

சுற்றமும் பற்றும் சொந்தமும் பந்த
பாசமும் துறந்துனைத் துர்க்கை
நற்பணிக் கென்றே அர்ப்பணஞ் செய்தாய்,
நாடெலாம் உன்னைநன் கறியும்!
சொற்பெழி வாளர் பலருள ரெனினும்
தொண்டர்க்கு நாயக மாக
நிற்பவள் நீயே; நெடிதுநாள் வாழ்ந்து
நிமிர்த்துக எமையெலாம் அன்னாய்!

நீரினுள் மூழ்கி நெருப்பிடை நடந்து
நித்திரை உணவு — இவை துறந்து
பாரெலாம் அலைவோர் காணுதற் கரிய
பரம்பொருள் அதனைநீ நாளும்
ஊருல கினுக்கென் றாற்றுமத் தொண்டின்
ஊடுகண் டின்புறல் அறிவோம்!
வேறெனத் தமிழர் விடிவிளக் கென்ன
விளங்குவை வாழிநீ டூழி!

— சோ. ப

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
65ஆவது பிறந்த நாளன்று
முரசொலி பாடியளித்த வாழ்த்து
07.01.1990

முல்லை அச்சகம், யாழ்ப்பாணம்.